# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## TNPSC -ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (தொகுதி-IV பணிகள்)

**தேர்வு:** தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC)

**பாடம் :** தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

**பகுதி :** அலகு II: சொல்லகராதி - பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல்

### உள்ளடக்கம்

**பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல்** ........ 2

**பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்கள்** ........ 2

**மாதிரி வினாக்கள்** ........ 12

**© Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act. It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

# அலகு II: சொல்லகராதி

## பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல்

"பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல்" என்பது நாம் அன்றாட வாழ்க்கையில் இயல்பாகப் பேசும் பேச்சுத்தமிழ் சொற்களுக்கு நிகரான அல்லது இணையான, இலக்கணச் சுத்தமான தூய தமிழ்ச் சொற்களை கண்டுபிடித்து பொருத்துவதாகும்.

### எடுத்துக்காட்டுகள்

- அம்மாஞ்சி – ஏமாளி
- அரிசிப்பருப்பு - அரிசியும் பருப்பும்

### பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்கள்

| பேச்சு வழக்கு சொற்கள் | தூய தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| **சொல்லு** | சொல் |
| **நில்லு** | நில் |
| **வந்தியா?** | வந்தாயா? |
| **சாப்ட்டியா** | சாப்பிட்டாயா |
| **போயி** | போய் |
| **படிக்கிறாங்க** | படிக்கிறார்கள் |
| **வளருது** | வளர்கிறது |
| **இறங்குறாங்க** | இறங்குகிறார்கள் |
| **வாரான்** | வரமாட்டான் |
| **எப்பவும்** | எப்பொழுதும் |
| **மதிய வேக்காடு** | மதிய வெப்பம் |
| **புஞ்சை** | புன்செய் |
| **கிட்டே போய்** | அருகில் சென்று |
| **ரண்டு** | இரண்டு |
| **ஒத்தாசை** | உதவி செய்தல் |

| | |
|---|---|
| **சொகம்** | சுகம் |
| **உக்காந்து** | உட்கார்ந்து |
| **முழிப்பு** | விழிப்பு |
| **அங்கெ** | அங்கே |
| **பிடிச்ச** | பிடித்த |
| **ராத்திரி** | இரவு |
| **மத்தியானம்** | மதியம் |
| **ஒம் பேரு** | உன் பெயர் |
| **தெரியலப்பா** | தெரியவில்லை |
| **யாருன்னு** | யாரென்று |
| **நீங்க** | நீங்கள் |
| **வெச்சிட்டு** | வைத்துவிட்டு |
| **வாங்க** | வாருங்கள் |
| **வர்ற** | வருகிற |
| **ஊரு** | ஊர் |
| **ரொம்ப** | மிகவும் |
| **வரலை** | வரவில்லை |
| **தேங்கா** | தேங்காய் |
| **வண்டியில** | வண்டியில் |
| **போறது** | போகிறது / செல்வது |
| **மண்ட** | மண்டை |
| **உடைஞ்சு** | உடைந்து |
| **ஏமாத்தாதே** | ஏமாற்றாதே |
| **கிடந்துட்டு** | இருந்துவிட்டு |
| **சொல்றீங்க** | சொல்கிறீர்கள் |
| **ஒண்ணும்** | ஒன்றும் |

| | |
|---|---|
| **நல்லாத்தான்** | நன்றாகத்தான் |
| **வர்றேன்** | வருகிறேன் |
| **வூடு** | வீடு |
| **வவுத்து வலி** | வயிற்று வலி |
| **சாப்புடணும்** | சாப்பிடவேண்டும் |
| **முந்தின நாள்** | முந்தைய நாள் |
| **குடுத்துடுங்க** | கொடுத்துவிடுங்கள் |
| **மூணு ரூபாய்** | மூன்று ரூபாய் |
| **வந்தா** | வந்தால் |
| **இன்னைக்கு** | இன்றைக்கு |
| **பாத்தியா** | பார்த்தாயா |
| **பாத்தீங்களா** | பார்த்தீர்களா |
| **அதுக்குள்** | அதற்குள் |
| **இருக்கு** | இருக்கிறது |
| **இருக்குது** | இருக்கிறது |
| **இது** | இருக்கிறது |
| **நல்லாச் சாப்பிட்டான்** | நன்றாகச் சாப்பிட்டான் |
| **எல** | இலை |
| **ஒலகம்** | உலகம் |
| **நினைச்சு** | நினைத்து |
| **குதிச்சு** | குதித்து |
| **மாத்தணும்** | மாற்றவேண்டும் |
| **சொல்றாரு** | சொல்கிறார் |
| **கேக்கல** | கேட்கவில்லை |
| **வாசல்** | வாயில் |
| **சேர்த்து வச்ச** | சேர்த்து வைத்திருந்த |

| | |
|---|---|
| **உடைச்சிட்டியே** | உடைத்துவிட்டாயே |
| **அதுல இருந்த** | அதில் இருந்த |
| **வெளியில வருது** | வெளியில் வருகிறது |
| **நாதசுரம்** | நாகசுரம் |
| **எல்லார் வீட்டிலயும்** | எல்லோர் வீட்டிலும் |
| **தெரிஞ்சி** | தெரிந்து |
| **அவுங்க** | அவர்கள் |
| **இருக்குன்னு** | இருக்கிறது |
| **நெனச்சு** | நினைத்து |
| **படிக்கல** | படிக்கவில்லை |
| **நல்லதும்பாங்க** | நல்லது என்பார்கள் |
| **செஞ்சா** | செய்தால் |
| **வேணும்னா** | வேண்டுமென்றால் |
| **நாம இன்னைக்கு** | நாம் இன்றைக்கு |
| **வேல இல்ல** | வேலை இல்லை |
| **சோத்துக்கு** | சோற்றுக்கு |
| **வித்துட்டு** | விற்றுவிட்டு |
| **வச்சுத்தான்** | வைத்துதான் |
| **பேசாம இரு** | பேசாமல் இரு |
| **ஒன்** | உன் |
| **புள்ளை** | பிள்ளை |
| **போயிருச்சோ** | சென்றுவிட்டதோ |
| **எறங்கி** | இறங்கி |
| **விடிஞ்சதும்** | விடிந்ததும் |
| **மொதல்ல** | முதலில் |
| **கெடக்கோ** | இருக்கோ |

| | |
|---|---|
| **சொமந்துக்கிட்டு வரணும்** | சுமந்துகொண்டு வரவேண்டும் |
| **போறது** | போவது |
| **பண்ணு** | செய் |
| **தொடப்படாது** | தொடக்கூடாது |
| **குடுத்துக்கலாம்** | கொடுத்துவிடலாம் |
| **பசிக்குது** | பசிக்கிறது |
| **தெரிஞ்சிருக்குது** | தெரிந்துள்ளது |
| **அத** | அதை |
| **பாருங்க** | பாருங்கள் |
| **இன்னக்கி** | இன்றைக்கு |
| **இல்லீங்க** | இல்லை |
| **வச்சிருங்க** | வைத்துவிடுங்கள் |
| **ஏத்தி** | ஏற்றி |
| **போகலியா** | போகவில்லையா |
| **எங்கே போறது** | எங்கே போவது |
| **அம்மாஞ்சி** | ஏமாளி |
| **அரிசிப்பருப்பு** | அரிசியும் பருப்பும் |
| **அவகாசம்** | காலக்கெடு / நேரம் |
| **ஆஸ்பத்திரி** | மருத்துவமனை |
| **இண்ணைக்கு / இன்னைக்கு** | இன்று |
| **உசரம்** | உயரம் |
| **எம்பிட்டு / எவ்ளோ** | எவ்வளவு |
| **கடுதாசி** | கடிதம் |
| **கதவத் தெற** | கதவைத் திற |
| **சாவி** | திறவுகோல் |
| **சீக்கு** | நோய் / பிணி |

| | |
|---|---|
| **தண்ணி** | தண்ணீர் |
| **துட்டு / காசு** | பணம் |
| **பரீட்சை** | தேர்வு |
| **பொண்டாட்டி** | மனைவி |
| **வவுறு / வௌறு** | வயிறு |
| **வேணும்காட்டி** | வேண்டும் என்று |
| **ரோடு** | சாலை |
| **அகண்ட** | அகன்ற |
| **அடமழை** | அடை மழை |
| **அதுகள்** | அவைகள் |
| **அனியாயம்** | அநியாயம் |
| **அமக்களம்** | அமர்க்களம் |
| **அவங்க** | அவர்கள் |
| **அங்கை** | அங்கே |
| **அடமானம்** | அடைமானம் |
| **அண்டைக்கு** | அன்றைக்கு |
| **அருகாமை** | அண்மை |
| **அருவாள்** | அறிவாள் |
| **ஆக்கள்** | ஆட்கள் |
| **அவங்க** | அவர்கள் |
| **ஆராச்சி** | ஆராய்ச்சி |
| **ஆத்தங்கரை** | ஆற்றங்கரை |
| **ஆம்பிளைப்பிள்ளை** | ஆண்பிள்ளை |
| **இறச்சி** | இறைச்சி |
| **இளனி** | இளநீர் |
| **உசரம்** | உயரம் |

| | |
|---|---|
| **உசிர்** | உயிர் |
| **உடமை** | உடைமை |
| **உயற்சி** | உயர்ச்சி |
| **உருத்து** | உரித்து |
| **உஸ்தியோகம்** | உத்தியோகம் |
| **ஊத்துதல்** | ஊற்றுதல் |
| **எண்ணை** | எண்ணெய் |
| **எலிமிச்சம்பழம்** | எலுமிச்சம்பழம் |
| **எழவு** | இழவு |
| **ஒண்டு** | ஒன்று |
| **ஒம்பது** | ஒன்பது |
| **கடக்கரை** | கடற்கரை |
| **கடசி** | கடைசி |
| **கட்டிடம்** | கட்டடம் |
| **கண்டு** | கன்று |
| **கண்முழித்தல்** | கண்விழித்தல் |
| **கதைத்தல்** | பேசுதல் |
| **கத்திரிக்கோல்** | கத்தரிக்கோல் |
| **கம்பிலி** | கம்பளி |
| **காக்கா** | காக்கை |
| **காச்சல்** | காய்ச்சல் |
| **காத்தாடி** | காற்றாடி |
| **கடா** | கிடாய் |
| **கிணத்தடி** | கிணற்றடி |
| **கிராணம்** | கிரகணம் |
| **குடு** | கொடு |

| | |
|---|---|
| **குடுத்தல்** | கொடுத்தல் |
| **குடும்பி** | குடுமி |
| **குத்துயிர்** | குற்றுயிர் |
| **கும்புடுதல்** | கும்பிடுதல் |
| **குலைத்தது** | குரைத்தது |
| **கேழ்வி** | கேள்வி |
| **கைமாத்து** | கைமாற்று |
| **கோடாலி** | கோடரி |
| **கோர்வை** | கோவை |
| **சதை** | தசை |
| **சமயல்** | சமையல் |
| **சவுக்காரம்** | சவர்க்காரம் |
| **சவுக்காலை** | சவக்காலை |
| **சாம்பராணி** | சாம்பிராணி |
| **சிகப்பு** | சிவப்பு |
| **சிலவு** | செலவு |
| **சுகயீனம்** | சுகவீனம் |
| **சுடுதண்ணி** | சுடுநீர் |
| **சுழட்டு** | சுழற்று |
| **சேதி** | செய்தி |
| **சொற்பனம்** | சொப்பனம் |
| **சோத்துப்பானை** | சோற்றுப்பானை |
| **தண்ணி** | தண்ணீர் |
| **தலகணி** | தலையணை |
| **தவக்கை** | தவளை |
| **தாவாரம்** | தாழ்வாரம் |

| | |
|---|---|
| **திருவுதல்** | திருகுதல் |
| **தீத்தம்** | தீர்த்தம் |
| **தீவாளி** | தீபாவளி |
| **துடை** | தொடை |
| **துறப்பு** | திறப்பு |
| **துளிர்** | தளிர் |
| **துவங்கு** | தொடங்கு |
| **தேத்தண்ணி** | தேநீர் |
| **தொந்திரவு** | தொந்தரவு |
| **தொப்புள்** | கொப்பூழ் |
| **தொவக்கம்** | துவக்கம் |
| **நாகரீகம்** | நாகரிகம் |
| **நாத்தம்** | நாற்றம் |
| **நிறம்ப** | நிரம்ப |
| **நேத்தி** | நேர்த்தி |
| **நேத்து** | நேற்று |
| **நொங்கு** | நுங்கு |
| **பசும்பால்** | பசுப்பால் |
| **பட்டிணி** | பட்டினி |
| **பத்தை** | பற்றை |
| **பனமரம்** | பனைமரம் |
| **பழசு** | பழையது |
| **பாவக்காய்** | பாகற்காய் |
| **பிலாமரம்** | பலாமரம் |
| **புடவை** | புடைவை |
| **புட்டு** | பிட்டு |

| | |
|---|---|
| **புத்து** | புற்று |
| **பெரிசு** | பெரிது |
| **பேதமை** | பேதைமை |
| **மதவு** | மதகு |
| **மம்பட்டி** | மண்வெட்டி |
| **முத்துதல்** | முற்றுதல் |
| **முன்னூறு** | முந்நூறு |
| **முளகாய்** | மிளகாய் |
| **மூஞ்சி** | முகம் |
| **மெள்ள** | மெல்ல |
| **ராகம்** | இராகம் |
| **ரெட்டை** | இரட்டை |
| **ரெண்டு** | இரண்டு |
| **ரொம்ப** | நிரம்ப |
| **வந்தாங்க** | வந்தார்கள் |
| **வவுத்துவலி** | வயிற்றுவலி |
| **வாசல்** | வாயில் |
| **வாய்வு** | வாயு |
| **விசரி** | விசிறி |
| **வெக்கம்** | வெட்கம் |
| **வெண்ணை** | வெண்ணெய் |
| **வெத்திலை** | வெற்றிலை |
| **வெய்யில்** | வெயில் |
| **வேர்வை** | வியர்வை |
| **வைக்கல்** | வைக்கோல் |
| **வயித்துவலி** | வயிற்றுவலி |

## மாதிரி வினாக்கள்

| பேச்சு வழக்கு சொற்கள் | தூய தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| **வீட்டுக்கு ஒரு மரம் வளக்கணும்.** | வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும். |
| **மான் பச்சப்புல்ல மேயுது.** | மான் பசும்புல்லை மேய்கின்றது. |
| **பெரியவங்க சொல்றதக் கேக்கணும்.** | பெரியவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். |
| **அவங்க, மெரினாக் கடற்கரைக்குப் போனாங்க.** | அவர்கள், மெரினாக் கடற்கரைக்குப் போனார்கள். |
| **எனக்குத் தாகமா இருக்கு.** | எனக்குத் தாகமாய் இருக்கின்றது. |
| **ராஜா, வீட்டுக்குள்ள நொழைஞ்சான்.** | ராஜா, வீட்டிற்குள் நுழைந்தான். |
| **அப்பா, நீங்க சொன்ன மாதிரி எழுதிட்டேன்.** | அப்பா, நீங்கள் கூறியபடி எழுதிவிட்டேன். |
| **நெகிழிப் பையைப் பயன்படுத்தாத!** | நெகிழிப் பையைப் பயன்படுத்தாதே! |
| **இந்த மண் பானைய யாரு உடச்சது.** | இந்த மண் பானையை யார் உடைத்தது. |
| **போன வகுப்புல என்ன பாடம் படிச்சோம்?** | சென்ற வகுப்பில் என்ன பாடம் படித்தோம்? |
| **வள்ளி பூவப் பறிச்சி வந்தா.** | வள்ளி பூவைப் பறித்து வந்தாள். |
| **குளத்துக்குப் பக்கத்துல ஒரு ஆலமரம் இருந்துச்சு.** | குளத்திற்கு அருகில் ஒரு ஆலமரம் இருந்தது. |
| **உனக்குத் தூக்கம் வரலையா?** | உனக்குத் தூக்கம் வரவில்லையா? |
| **இன்னைக்கு என்ன வீட்டுப்பாடம் கொடுத்தாங்க?** | இன்றைக்கு என்ன வீட்டுப்பாடம் கொடுத்தார்கள்? |
| **அம்மா வீட்ல இருக்காங்களா?** | அம்மா வீட்டில் இருக்கின்றார்களா? |
| **தீவாளிக்கு புதுச்சட்ட வாங்குனேன்.** | தீபாவளிக்கு புதுச்சட்டை வாங்கினேன். |
| **அருணா பரிட்சை எழுதப் போறா.** | அருணா தேர்வு எழுதப் போகிறாள். |
| **எங்க ஊரு பேரு சிவகாசி.** | எங்கள் ஊர் பெயர் சிவகாசி. |

| | |
|---|---|
| **கபடி போட்டியில நா சேர்ந்துருக்கேன்.** | கபடி போட்டியில் நான் சேர்ந்து இருக்கின்றேன். |
| **ராகுல் பழம் சாப்டான்.** | ராகுல் பழம் சாப்பிட்டான். |
| **கங்காரு ஒரே தாவல்ல ஆறடி உயரத்துக்குத் தாவும்.** | கங்காரு ஒரே தாவலில் ஆறடி உயரத்திற்குத் தாவும். |
| **ஏட்ல எழுதாத பாடல் நாட்டுப்புறப்பாடல்.** | ஏட்டில் எழுதாத பாடல் நாட்டுப்புறப்பாடல். |
| **யான கத்துற சத்தம் ரொம்ப தூரம் கேட்கும்.** | யானை பிளிறும் சத்தம் அதிக தூரம் கேட்கும். |
| **குவளையில தண்ணி ஊத்து.** | குவளையியில் தண்ணீர் ஊற்று. |
| **ஜன்னலத் (சாளரம்) தெற.** | ஜன்னலைத்(சாளரம்) திற. |
| **நல்ல புத்தகங்களப் படி.** | நல்ல புத்தகங்களைப் படி. |
| **நீ எத்தனஆப்பு படிக்கிற?** | நீ எத்தனையாவது வகுப்பு படிக்கின்றாய்? |
| **ஒங்க வீட்ல பூச்செடி இருக்கா?** | உனது வீட்டில் பூச்செடி இருக்கின்றதா? |
| **காக்கா கூடு கட்டுச்சு.** | காகம் கூடு கட்டியது. |
| **மீன் தண்ணில துள்ளித்துள்ளிக் குதிக்குது.** | மீன் தண்ணீரில் துள்ளித்துள்ளிக் குதிக்கின்றது. |
| **செங்கல வச்சு கட்டிய வீடு.** | செங்கலை வைத்து கட்டிய வீடு. |
| **கௌதாரி இரை தேடிப் பறந்துச்சு.** | கௌதாரி இரை தேடிப் பறந்தது. |
| **நெல் வயல்ல அறுவடைக்காலம் முடிஞ்சிருச்சு.** | நெல் வயலில் அறுவடைக்காலம் முடிந்துவிட்டது. |
| **அது ரொம்ப வயசான கொக்கு.** | அது மிகவும் வயதான கொக்கு. |
| **சிங்கத்துப் பாத்து எலி பயந்துச்சு.** | சிங்கத்தைப் பார்த்து எலி பயந்தது. |
| **குதுர வேமா ஒடும்.** | குதிரை வேகமாக ஒடும். |
| **செடியில பூ பூத்துச்சு.** | செடியில் பூ பூத்தது. |
| **யான தண்ணி குடிக்க குளத்துக்கு வந்துச்சு.** | யானை தண்ணீர் குடிக்க குளத்திற்கு வந்தது. |

| | |
|---|---|
| **இன்னைக்கு பள்ளிக்கூடம் இல்ல.** | இன்றைக்கு பள்ளிக்கூடம் இல்லை. |
| **அவரு உப்பு வியாபாரம் பாக்குறாரு.** | அவர் உப்பு வியாபாரம் பார்க்கிறார். |
| **மருத்துவரு அவள பரிசோதிச்சிப் பாத்தாரு.** | மருத்துவர் அவளை பரிசோதித்துப் பார்த்தார். |
| **வாழ்ற இடத்தச் சுத்தமா வச்சுக்கணும்.** | வாழ்கின்ற இடத்தைச் சுத்தமாக வைக்க வேண்டும். |
| **மழைக்காலத்துல வெண்ணி குடி.** | மழைக்காலத்தில் வெந்நீர் குடி. |
| **பொண்ணுங்க போட்டுக்குற ஆபரணத்துல ஒண்ணு வளயல்.** | பெண்கள் அணியும் ஆபரணங்களில் ஒன்று வளையல். |
| **இன்னைக்கு வெயில் ரொம்ப அடிக்கி.** | இன்றைக்கு வெயில் அதிகமாக இருக்கின்றது. |
| **நா தினமும் இரண்டு தடவ பல் விளக்குவேன்.** | நான் தினமும் இரண்டுமுறை பல் துலக்குவேன். |
| **ஏன் மெதுவா கடிதம் எழுதுற?** | ஏன் மெதுவாக கடிதம் எழுதுகின்றாய்? |
| **வேடன் ஒருத்தன் பறவையப் பிடிச்சிட்டு வந்தான்.** | வேடன் ஒருவன் பறவையைப் பிடித்து வந்தான். |
| **நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து தான் விளையாடணும்.** | நீங்கள் இருவரும் சேர்ந்து தான் விளையாட வேண்டும். |
| **ஏன் ஒன்னுமே பேசாம இருக்கீங்க?** | ஏன் ஒன்றும் பேசாமல் இருக்கின்றீர்கள்? |
| **கடற்கரையில பெரிய தென்னமரம் இருக்கு.** | கடற்கரையில் பெரிய தென்னமரம் இருக்கின்றது. |
| **நிலத்துல சரியான விளைச்சலில்ல.** | நிலத்தில் சரியான விளைச்சல் இல்லை. |
| **அவன் புத்திசாலித்தனமா பதில் சொன்னான்.** | அவன் புத்திசாலித்தனமாக பதில் கூறினான். |
| **இந்த வருசம் மழையே பெய்யல.** | இந்த வருடம் மழையே பெய்யவில்லை. |
| **ராமன், அரண்மனைல வேலை பாக்குறான்.** | ராமன், அரண்மனையில் வேலை பார்க்கின்றான். |

| | |
|---|---|
| **நா நல்லா இருக்கேன்.** | நான் நன்றாக இருக்கின்றேன். |
| **பேர், விலாசம் சொல்லு.** | உன் பெயர், முகவரி கூறு. |
| **கடமையச் செய். பலன எதிர்பாராத.** | கடமையைச் செய். பலனை எதிர்பார்க்காதே. |
| **புத்தாண்ட நீ எப்படி கொண்டாடுவ?** | புத்தாண்டை நீ எப்படி கொண்டாடுவாய்? |
| **இந்தியாவோட தலைநகரம் எது?** | இந்தியாவின் தலைநகரம் எது? |
| **அவன் ரொம்ப நல்லாப் படிப்பான்.** | அவன் மிகவும் நன்றாகப் படிப்பான். |

## முந்தைய ஆண்டு வினாக்கள்

**1. பின்வருவனவற்றுள் பேச்சு வழக்கு அல்லாத தொடரைக் கண்டறிக:** *(TNPSC/CTSE 2024)*

அ) உழவர்கள் வயலில் இறங்குறாங்க

ஆ) உழவர்கள் வயலில் இறங்கறாங்க

இ) உழவர்கள் வயலில் இறங்கினார்கள்

ஈ) உழவர்கள் வயலில் இறக்கிட்டாங்க

**விடை: இ) உழவர்கள் வயலில் இறங்கினார்கள்**

**2. பேச்சு வழக்கு சொல்லுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிந்து எழுதுக.** *(TNPSC/CTND003GS/2024)*

***இன்னைக்குக் காத்தாலே காப்பி குடித்தேன்***

அ) இன்னைக்குக் காத்தாலே சுடுதண்ணீர் குடித்தேன்

ஆ) இன்றைக்கு காலையில் குழம்பிநீர் குடித்தேன்

இ) இன்னைக்கு காலையில் கஷாயம் குடித்தேன்

ஈ) இன்றைக்கு காத்தாலே தேநீர் குடித்தேன்

**விடை: ஆ) இன்றைக்கு காலையில் குழம்பிநீர் குடித்தேன்**

**3. சரியான பேச்சு வழக்கு தொடரைக் காண்க.** *(CTND003GS/2024)*

அ) இதோ எழுப்புகிறேன்

ஆ) இதா எழுப்பறேன்

இ) இதோ எழுப்புகின்றேன்

ஈ) இதோ எழுப்புகின்றான்

**விடை: ஆ) இதா எழுப்பறேன்**

**4. 'எங்க நிக்கற?' - இந்த பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக்கும் பொழுது எவ்வாறு அமையும்?** *(TNPSC/PCTS/2024)*

அ) எங்கு நிற்கிறது?

ஆ) எங்கே நிற்கிறாய்?

இ) எங்கே நில்கிறாய்?

ஈ) எங்கு நில்குது?

**விடை: ஆ) எங்கே நிற்கிறாய்?**

**5. பேச்சு வழக்கிற்கு ஏற்ற எழுத்து வழக்குச் சொற்களை எழுதுக.** *(TNPSC/PCTS/2024)*

***எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது***

அ) எதிரில் ஒரு தேநீர்க்கடை இருந்தது

ஆ) எதிரில் ஒன்று டீ ஸ்டால் இருந்தது

இ) எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்கும்

ஈ) எதிரில் ஒரு தேநீர்க்கடை இருக்கிறது

**விடை: ஈ) எதிரில் ஒரு தேநீர்க்கடை இருக்கிறது**

**6. பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.** *(TNPSC/PCTS/2024)*

அ) "தம்பி நீ எங்க நிக்கிறே"?

ஆ) "தம்பி நீ எங்கே நிக்குற"?

இ) "தம்பி நீ எங்கே நிற்கின்றாய்"?

ஈ) "தம்பி நீ எங்கே இருக்க"?

**விடை: இ) "தம்பி நீ எங்கே நிற்கின்றாய்"?**

**7. எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிக:** *(AAOGS/2024)*

அ) சோலைக்குள் சத்தமில்லாமல் தென்றலு வீசுது.

ஆ) சோலைக்குள் சத்தமில்லாமல் தென்றல் வீசியது

இ) சோலைக்குள்ளே சத்தமில்லாமல் தென்றலு வீசியது

ஈ) சோலையிலே சத்தமில்லாமல் தென்றலு வீசியது

**விடை: ஆ) சோலைக்குள் சத்தமில்லாமல் தென்றல் வீசியது**

**8. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு** *(TNPSC/CASEGS/2024)*

***பேருந்து நிலையயம் அருகாமையில் வளவன் பால் குடித்துக் கொண்டிருந்தான்.***

அ) பேருந்துநிலையம் அருகாமையில் வளவன் பால் பருகிக் கொண்டிருந்தான்

ஆ) பேருந்து நிலையம் அருகில் வளவன் பால் குடித்துக் கொண்டிருந்தான்

இ) பேருந்து நிலையம் அருகில் வளவன் பால் பருகிக் கொண்டிருந்தான்

ஈ) பேருந்து நிலையம் அருகே வளவன் பால் குடித்துக் கொண்டிருந்தான்

**விடை: இ) பேருந்து நிலையம் அருகில் வளவன் பால் பருகிக் கொண்டிருந்தான்**

**9. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு** *(TNPSC/EOIGS/2024)*

***அவன் திருமணத்திற்குப் போய் வாரான்***

அ) அவன் திருமணத்திற்குப் போய் வருகிறான்

ஆ) அவன் திருமணத்திற்குப் போய் வாரான்

இ) அவன் திருமணத்திற்குப் போய் வாரோன்

ஈ) அவன் திருமணத்திற்குப் போய் வாராண்

**விடை: அ) அவன் திருமணத்திற்குப் போய் வருகிறான்**

**10. பேச்சு வழக்கிற்கு ஏற்ற எழுத்து வழக்குச் சொற்களை எழுதுக.** *(TNPSC/EOIGS/2024)*

***அவன கூட்டிட்டு வர்றேன்.***

அ) அவனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்

ஆ) அவனைக் கூட்டித்தான் வருவேன்

இ) அவனெ கூட்டிக்கு வாரேன்

ஈ) அவனைக் கூப்பிட்டு வருகிறேன்

**விடை: அ) அவனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்**